2017 ஜூலை 13]

தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய சீரிய முயற்சியினால், ரூ.1,228 கோடி விடுவிக்கப்பட்டு, படிப்படியாக விவசாயிகளுக்கு பயிர்க் காப்பீட்டுத் தொகை வழங்கப்பட்டு வருகிறது. விரைவில் உறுப்பினர் சார்ந்திருக்கிற மாவட்டத்திற்கும், அவருடைய தொகுதிக்கும் வழங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 200, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. நடராஜன், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

200—

கால்நடைக் கிளை நிலையம்

***9760—திரு. அ. நடராஜன்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பல்லடம் தொகுதி, பல்லடம் ஒன்றியம், இச்சிப்பட்டி கிராமத்தில் கால்நடைக் கிளை நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பா. பாலகிருஷ்ணா ரெட்டி, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம், பல்லடம் தொகுதி மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. அ. நடராஜன் அவர்கள், பல்லடம் தொகுதி, பல்லடம் ஒன்றியம், இச்சிப்பட்டி கிராமத்தில் கால்நடைக் கிளை நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா என்று கேள்வி கேட்டிருக்கிறார். திருப்பூர் மாவட்டம், பல்லடம் தொகுதி, பல்லடம் ஒன்றியம், இச்சிப்பட்டி கிராமத்தில் கால்நடை அலகுகள் 3,000–க்கும் அதிகமாக உள்ளதால், இச்சிப்பட்டி கிராமத்தில் கால்நடைக் கிளை நிலையம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று, உரிய நடவடிக்கை

மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. நடராஜன் அவர்கள்.

திரு. அ. நடராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்' என்ற வள்ளலாரின் கூற்றுக்கேற்ப, வறட்சியால் வாடிய கால்நடைகளின் வயிற்றுப் பசியைப் போக்கிய, அம்மா! அம்மா!! என்று அழைக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) ஐந்தறிவு படைத்த கால்நடைகளுக்கும் தாயாக விளங்கிய மாண்புமிகு அம்மா அவர்கள் இருக்கும் திசை நோக்கி வணங்கி, மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் நல்லாட்சி நடத்திவரும் மாண்புமிகு முதல்வர் அவர்களையும் வணங்குகிறேன். பேசுவதற்கு வாய்ப்பினை வழங்கிய தங்களையும் வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்லடம் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட பல்லடம் ஊராட்சி ஒன்றியம், இச்சிப்பட்டியில் கால்நடைக் கிளை நிலையம் அமைக்கப்படும் என்று பதிலைத் தந்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு தொகுதி மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்தக் கால்நடைக் கிளை நிலையம் இந்த ஆண்டே அமைக்கப்படுமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பா. பாலகிருஷ்ணா ரெட்டி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிதியாண்டிலே அங்கு கால்நடைக் கிளை நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இருக்கின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. நடராஜன் அவர்கள்.

திரு. அ. நடராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்மாவின் அரசிலே கேட்டவுடனேயே வாரி வழங்கிய

2017 ஜூலை 13]

மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் தொகுதியின் சார்பாகவும், என் சார்பாகவும் நன்றியைத் தெரிவித்து, அமருகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மருதமுத்து அவர்கள்.

முற்பகல் 11–15

திரு. அ. மருதமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மண்ணை விட்டு மறைந்திருந்தாலும், மக்களின் உள்ளங்களிலும், இல்லங்களிலும் வாழ்ந்துகொண்டிருக்கும் மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) நிமிர்ந்த நடை, நேர்கொண்ட பார்வை, மனசாட்சியோடு அம்மா அவர்களின் வழியிலே ஆட்சி செய்துவரும் கொங்கு நாட்டுத் தங்கம், சேலத்து சிங்கம், ஆற்றல்மிக்க முதலமைச்சர் மாண்புமிகு எடப்பாடியார் ஐயா அவர்களையும் வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) துணைக் கேள்வி கேட்க எனக்கு அனுமதி வழங்கிய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களையும் வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கெங்கவல்லி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட புளியங்குறிச்சி கிராமம் 3,800 வாக்காளர்களைக் கொண்ட கிராம ஊராட்சியாகும். இந்த ஊராட்சியைச் சுற்றிலும், வெள்ளையூர், பகடப்பாடி, கோவிந்தம்பாளையம், வேப்பம்பூண்டி மற்றும் சித்தேரி ஆகிய கிராமங்கள் உள்ளன. இப்பகுதியில் 30,000–க்கும் அதிகமான கால்நடைகள் உள்ளன. இந்தக் கால்நடைகளுக்கு நோய் ஏற்பட்டால், 8 கிலோ மீட்டருக்கு அப்பாலுள்ள வீரகனூர், தலைவாசல் ஆகிய கால்நடை துணை மருத்துவமனைகளுக்குச் செல்லவேண்டிய அவசியம் உள்ளது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், புளியங்குறிச்சி ஊராட்சியில் ஒரு கால்நடை துணை மருத்துவமனையை அமைத்துத் தருவாரா என்பதைத் தங்கள் மூலமாகக் கேட்டு, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பா. பாலகிருஷ்ணா ரெட்டி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்,

7, 8 கிலோ மீட்டர் தூரம் கடந்து கால்நடை மருத்துவமனைக்குச் செல்லவேண்டிய நிலையிருக்கிறது என்றும், அந்தப் பகுதியில் நிறைய கால்நடைகள் இருக்கின்றன என்றும் சொல்லியிருக்கிறார்கள். அதுபோன்று இருந்தால், கண்டிப்பாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய பார்வைக்குக் கொண்டு சென்று புதிதாக கால்நடைக் கிளை நிலையம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்—விடைகள் நேரம் முடிவுற்றது.*

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

2. தகவல் கோரல்

(அ) செம்மொழி தமிழாய்வு மத்திய நிறுவன அலுவலக முத்திரையில் தமிழ்மொழி இடம்பெற வலியுறுத்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.*

திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையில் உள்ள செம்மொழி தமிழாய்வு மத்திய நிறுவனத்தினுடைய அலுவலக முத்திரை இந்தி எழுத்துக்களில் மட்டுமே இருக்கிறது என்று இன்று காலையிலே எல்லா பத்திரிகைகளிலும், ஊடகங்களிலும் செய்தியாக வந்திருக்கிறது. செம்மொழி நிறுவனத்திலேயே இதுபோன்று தமிழுக்கு முக்கியத்துவம் இல்லை என்பது அதிர்ச்சி அளிக்கக்கூடிய செய்தியாக அமைந்திருக்கிறது. தமிழ்நாட்டிலே தமிழுக்கு இப்படி ஒரு நிலை வந்திருப்பது வேதனையான ஒன்று. செம்மொழி தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் தலைவர் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்தான். எனவே, அவரை நான் கேட்க விரும்புவது என்னவென்றால், அலுவலக முத்திரை இந்தியில் இருப்பது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? தமிழ் புறக்கணிக்கப்பட்டிருப்பதை மாண்புமிகு முதலமைச்சர்*